# ஜனாதிபதி தேர்தல் - 2010

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியாவுக்கு வெளிக்கள வருகைதரல்

## 22 ஜனவரி 2010

ஜனவரி 26 ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சூழ்நிலையைக் கண்காணிப்பதற்காக 2010 ஜனவரி 17-19 வரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு வெளிக்கள வருகைதரலொன்றை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (Centre for Monitoring Election Violence - CMEV) நடத்தியது. அண்மையில் மீளத்திரும்பியவர்கள் உட்பட பகுதியின் குடியிருப்பாளர்கள், உள்ளகரீதியாக இடம்பெயர்ந்த நபர்கள், சிவில் சமூகக் குழுவினர், முகவராண்மைகளைச் சேர்ந்தவர்கள், மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோரை CMEV சந்தித்தது.

### A9 மீது வடக்குக்கு பிரயாணித்தல்

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நடமாட்டம் மீது சுமத்தப்பட்ட பெருமளவு கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டதுடன், வடக்குக்கும், வடக்கிலிருந்தும் நடமாட்டத்தின் பாரிய சுதந்திரமொன்று கண்கூடாக விளங்கியது. A9 வீதி 24 மணித்தியாலங்களும் திறந்திருப்பதுடன், வழி நெடுகிலும் மிக சிறிதளவு சோதனைச் சாவடிகளே உள்ளன. யுத்தத்தின் போது, மதவாச்சியில் உள்ள சோதனைச் சாவடியில், வடக்குக்கு செல்வதற்கு அனுமதிச்சீட்டு (பாஸ்) ஒன்றை மக்கள் பெறவேண்டும். இது தற்போது ஒரு சில பாதுகாப்பு ஆளணியினர் மட்டும் இருக்கத்தக்கதாக முழுமையாக ஒழிக்கப்பட்டுள்ளது. வீதியின் மூலம் வவுனியாவுக்கு செல்வது தற்போது இலகுவாகவுள்ளது. வவுனியா வடக்கில் A9 வீதியில் உள்ள இரு சோதனைச் சாவடிகள் மட்டுமே ஓமந்தையிலும், ஆனையிறவிலும் உள்ளன. இங்கு வடக்குக்கு செல்லுபவர்களை பாதுகாப்பு ஆளணியினர் விசாரணை செய்கின்றனர். கடுமையான யுத்த நேர மற்றும் யுத்தத்திற்கு உடனடி பிந்திய சோதனை, தற்காலிகமாவது மறைந்து போயுள்ளதாகத் தெரிகின்றது. A9 வீதி மீது பிரயாணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதன் விளைவொன்றாக, பெரிதுமே தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் தொடர்ச்சியான மக்கள் ஓட்டம் உள்ளதுடன், இவர்கள் இடங்களைச் சுற்றிப் பார்ப்பதற்கும், பௌத்தர்களுக்கு சமய முக்கியத்துவத்தைக் கொண்ட தீவகமொன்றான நயினாதீவுக்கும் செல்கின்றார்கள். பிரயாணத்திற்கான தளர்வினால், பகுதியில் வாணிபமும், வர்த்தகமும் அதிகரித்துள்ளன. சந்தையில் பெருமளவு அதிக பொருட்கள் கிடைப்பதுடன், சிங்கள வர்த்தகர்களும், விற்பனைக்கூடங்களை அமைத்துள்ளார்கள். சில நாட்களில் தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 15,000 பேர் வருகை தருவதாக CMEVக்கு குடியிருப்பாளர் ஒருவர் கூறினார். பகுதிக்கு தெற்கிலிருந்து வருகைதரும் மக்களை பார்ப்பது உடன்பாடானதாக உள்ள அதேவேளை, இவ்வாறு திடீரென வருபவர்களை விருந்தோம்புவதற்கு மிகவும் சிறிதளவு வளங்களும், கட்டமைப்புகளும் உள்ளதாகவும், இதன் விளைவாக பஸ்களிலும், பொதுக் கட்டிடங்களிலும் மக்கள் நித்திரை கொள்வதாகவும் யாழ்ப்பாணத்தின் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாகவே வருகைதருபவர்களினதும், விருந்தோம்புபவர்களினதும் மனோநிலை பரஸ்பர ஏற்றுக்கொள்ளுதலின் ஒன்றாகவே விளங்கியது.

யாழ்ப்பாணத்தில் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன. தீவகங்களுக்கு இராணுவ அங்கீகாரம் அல்லது பதிவு இன்றி செல்வது இலகுவாக இருந்தது. முன்னைய வருடங்களில் காணப்பட்ட கெடுபிடியிலான சூழ்நிலையுடன் ஒப்பிடுகையில், பாதுகாப்பு ஆளணியினர் மிகவும் ஓய்வுநிலையுடனும், நட்புறவுடனும் காணப்பட்டனர். கீரிமலை போன்ற உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள சில பகுதிகள் அடையக்கூடியதாக இருப்பதாக CMEVக்கு அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக் குடியிருப்பாளர்களினால் நடமாட்டத்தின் சுதந்திரம் வரவேற்கப்பட்ட போதும், ஜனாதிபதி தேர்தல்களின் பின்னர் இத்தகைய தளர்வுகள் முடிவுக்கு வருமெனவும், முன்னைய கட்டுப்பாடுகள் அமுல்படுத்துமெனவும் ஓர் அச்சமுள்ளது. இந்த அச்சமும், A9 வீதியில் பிரயாணம் செய்யும் புதுமையும் பகல், இரவு முழுவதும் வீதியில் வாகனநெரிசலை அதிகரித்துள்ளது. ஓமந்தைக்கும், ஆனையிறவுக்கும் இடையில் ஒரு தொகையிலான சிறிய தேனீர் கடைகள் முளைத்துள்ளன. எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டுக் காலத்தின் போது அடர்த்தியற்றிருந்த பகுதியொன்று சிறிய கடைகள் உட்பட சிறிய வீடுகளை மீளத்திரும்புபவர்கள் அமைத்தல், நிலக்கண்ணிவெடிச் செயற்பாடு தொடர்தல், புதியவற்றுடன் பழைய கட்டமைப்புகள் பதிலீடு செய்யப்படுதல் என மாற்றமடைகின்றது. ஓமந்தையிலிருந்து வடக்குக்கான பாதையில் இராணுவ மற்றும் பொலிஸ் காவலரண்கள், முகாம்கள் மற்றும் கட்டமைப்புகள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளமையே மிகவும் விசேஷமானதாகும். A9 வீதியின் இரு புறங்களும் அப்புறப்படுத்தப்பட்டு, நிலக்கண்ணி வெடி அகற்றும் செயற்பாடு ஒன்றில் முடிக்கப்பட்டுள்ளது அல்லது தொடருகின்றது. அப்புறப்படுத்தப்பட்ட பகுதிகளில் மீளத்திரும்பியவர்கள்

குடியேற்றப்பட்டுள்ளதுடன், இவர்கள் தற்காலிகமான வீடுகளைக் கொண்டுள்ளார்கள். இவ் வீடுகளைச் சுற்றியும், வேறு பகுதிகளிலும் கணிசமானளவு இராணுவ, பொலிஸ், மற்றும் STF பிரசன்னமுள்ளது. பெருமளவு கடைகளும், குளிர்பானங்களை விற்பனை செய்யும் கட்டமைப்புகளும் இராணுவத்தினால் தாபிக்கப்பட்டு, நிருவகிக்கப்படுவது கண்கூடானதாகும்.

பகுதியில் துரிதமானதும், தத்ரூபமானதுமான மாற்றத்தை வன்னி இயற்கை வனப்பூட்டல் பிரதிபலிக்கின்றது. புதிய கட்டமைப்புகளுடனும், கட்டப்படுகின்ற அமைவிடங்களுடனும் முன்னைய நில எல்லைக்குறிகள் விரைவாகவே மறைந்து போகின்றன. எல்.ரி.ரி.ஈ. பொலிஸ் போன்ற முன்னைய எல்.ரி.ரி.ஈ. நிருவாகக் கட்டமைப்புகள் அரசாங்க அலுவலகங்களுக்காக பொறுப்பேற்கப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சியில் உள்ள UNHCR கட்டிடம் போன்ற வேறு கட்டிடங்களில் தற்போது பொலிஸ் குடியிருக்கின்றது. பகுதியில் இடம்பெறும் அபிவிருத்தி வடக்கு வசந்தம் கருத்திட்டத்தின் கீழ் வருவதாகவும், ஜனாதிபதி செயலணியினால் அது கட்டுப்படுத்தப்படுவதாகவும் CMEVக்கு அறிவிக்கப்பட்டது. A9 வீதியின் பக்கத்தில் இரு மிகப் பெரிய வெற்றிச்சின்னங்கள் கட்டப்பட்டிருந்தன. இவை இராணுவத்தினால் கடுமையாகக் காவல் காக்கப்படுகின்றது. ஒன்று ஆனையிறவில் உள்ளதுடன் மற்றது கிளிநொச்சியில் உள்ளது. பின்னையது இராணுவ ஆளணியினரால் சூழப்பட்டுள்ளதுடன், குடிமக்கள் அதை அடைய முடியாமல் இருப்பதாகத் தெரிகின்றது. A9 வீதி வழியே பௌத்த ஆலயங்களும், புனித தலங்களும் கட்டப்படுவதை CMEV கவனத்திற்கு எடுத்தது. இத்தகைய மூன்று கட்டமைப்புகளை பிரயாணத்தின் போது CMEV கண்டதுடன், இவை A9 வீதியிலிருந்து கண்ணுக்குத் தெரிந்தன. இப்பகுதிகளுக்கான நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையிட்டு தெளிவில்லை. பாரிய இராணுவப் பிரசன்னம், புதிய இராணுவ நிறுவுகைகள், சின்னங்கள் மற்றும் பௌத்த ஆலயங்கள் ஆகியன உட்பட வன்னியில் புதிய கட்டமைப்புகளும், கட்டுப்பாடுகளும் பகுதிக்காக அரசாங்கத்தினால் வலியுறுத்தப்பட்ட திட்டங்களின் குறிப்பாக, அங்கு இராணுவ தளங்களைத் தாபிப்பதை இத்திட்டங்கள் சம்பந்தப்படுத்துகின்றனவா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

கிளிநொச்சியிலும், A9 வீதி நெடுகிலும், வேறு பட்டினங்களிலும் அபிவிருத்தியிலான முன்னேற்றம் இருக்கின்ற போதிலும், மீளத்திரும்புபவர்களின் வாழ்க்கை இனிமேல் தான் மேம்பாடடையவுள்ளது. பெரும்பாலானோர் தற்காலிகமாக சிறிய வீடுகளில் வாழ்வதுடன், அடிப்படைச் சேவைகளை அடைவதில் கஷ்டங்களுக்கு முகம்கொடுக்கின்றார்கள். பாடசாலைக்குச் செல்வதற்கு பிள்ளைகளுக்கு இயலுமாக இருக்கின்ற போதிலும், கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதுடன், மரத்தளபாடங்கள் இல்லை. தற்காலிகமான கட்டமைப்புக்களிலேயே வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. மீளத்திரும்பியுள்ளவர்களின் விவசாயத் தொழிலும், வேறு வாழ்வாதாரங்களும் கட்டுப்பாடுகளின் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளன. வீதியின் பக்கத்தில் சிறிய வீடுகளை பெரும்பாலானோர் கொண்டிருப்பதுடன், திரும்பும் போது அவர்களுக்கு வழங்கப்பட்ட உதவியுடன் சமாளிக்க வேண்டியுள்ளது.

கிளிநொச்சியிலும், மற்றும் யாழ்ப்பாணத்திலும் உள்ள பெருமளவு இடங்களில் சேதமும், அழிவும் இன்னுமே கண்கூடாகவுள்ள அதேவேளை, பெருமளவு மக்கள் அதிகளவு ஓய்வு நிலையில் இருப்பதாகவே தெரிகின்றது. இருந்த போதிலும், தேர்தலுக்கு அப்பால் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள சுதந்திரம் நீடிக்காது என்றும், பெருமளவு கட்டுப்பாடுகள் மீளச்சுமத்தப்படும் என்றும் கரிசனை வெளிப்படுத்தப்பட்டது.

### வடக்கில் தேர்தல்களுக்கான பிரச்சாரம்

வருகை தரப்பட்ட பகுதிகளில் அபேட்சகர்களின் சில சுவரொட்டிகள் இருந்ததையும், போடப்பட்ட பெருமளவு தேர்தல் விடயதானங்கள் அகற்றப்பட்டிருந்ததையும் CMEV கவனத்திற்கெடுத்திருந்தது. மஹிந்த ராஜபக்ஷவின் ஒரு சில சுவரொட்டிகள் யாழ்ப்பாண நகரம், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பகுதிகள் மற்றும் வவுனியா ஆகியவற்றில் கண்கூடானதாக விளங்கின. தீவகத்தில் ஜனாதிபதியினதும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் சுவரொட்டியொன்று காணப்பட்டது. யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் உள்ள கட்சி அலுவலகங்களில் இரு பிரதான அபேட்சகர்களின் சுவரொட்டிகளும், பதாதைகளும் கண்கூடாக விளங்கின. ஏனைய அபேட்சகர்களின் பிரச்சார விடயதானங்களை அல்லது கட்சி அலுவலகங்களை CMEV காணவில்லை. யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் பெருமளவு அபேட்சகர்களினால் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டதாக CMEVக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தில் பிரச்சாரம் கண்கூடானதாக விளங்கவில்லை.

அரசாங்க வளங்கள் பயன்படுத்தப்பட்டதாக குழாமுக்கு அறிவுறுத்தப்பட்டது - யாழ்ப்பாணம் நகரில் மஹிந்த ராஜபக்ஷவினால் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்திற்காக துரையப்பா அரங்குக்கு மக்களை ஏற்றிச்செல்வதற்கு பெருமளவு இ.போ.ச. பஸ்கள் பயன்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் உள்ஏர் பாராளுமன்ற உறுப்பினர்களினாலும், வேறு அரசியல்வாதிகளினாலும் பிரச்சாரம் மட்டுப்பட்டிருந்தது என்றும், கிளிநொச்சியில் பிரச்சாரம் இருக்கவில்லை என்றும் CMEV குழாமுக்கு அறிவிக்கப்பட்டது. வேறு அரசியல்வாதிகளின் சம்பந்தத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் UPFA பிரச்சாரம் முன்னெடுத்துச் செல்லப்பட்டதாக யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் பெருமளவானோர் தெரிவித்தனர். முன்னர் தடுத்து வைக்கப்பட்டதும், அண்மையில் விடுவிக்கப்பட்டதுமான TNA பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டு, அரசாங்க விடுதியொன்றும், வாகனமொன்றும் வழங்கப்பட்டு மஹிந்த ராஜபக்ஷவிற்கு பிரச்சாரம் செய்யுமாறு கேட்கப்பட்டார் என அறிக்கைகள் உள்ளன. அண்மையில் மீளத்திரும்பியவர்களுக்கு உலர் பங்கீட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டு, மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு கேட்கப்பட்டனர். இது செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராமங்கள் உட்பட வவுனியாவில் உள்ள பகுதிகளில் இடம்பெற்றுள்ளது. செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மூன்று கிராமங்களில் சுமார் 1,200 பேருக்கு 2010 ஜனவரியில் அமைச்சர் ரிஷாத் பதியுத்தீனினால் உலர் பங்கீட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டதாக CMEV குழாமுக்கு அறிவிக்கப்பட்டது. ஏதேனும் மாவட்டத்தில் TNAஇன் கண்கூடான பிரசன்னம் அல்லது அதன் பிரச்சாரம் இருக்கவில்லை என்பதுடன், ஜனவரி 20இன் பின்னர் TNA பிரச்சாரம் ஆரம்பமாகும் என பலரும் தெரிவித்தனர். ஜனாதிபதி அபேட்சகரான சரத் பொன்சேகாவுக்கு TNA ஆதரவு உள்ளதாக பெருமளவு தனிப்பட்டவர்கள் அறிந்து வைத்திருந்த போதிலும், யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட யாரேனும் TNA பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவிரமாக பிரச்சாரம் செய்யவில்லை, பாரியளவில் பொதுமக்களுடன் தொடர்பாடலைக் கொண்டிருக்கவில்லை அல்லது தமது வாக்கைச் செலுத்த முடியாதவர்களின் சார்பாக ஆதரவு தேடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. உரிமைகளை இழந்தவர்களின் உரிமைகளை பரிந்துரைக்காதிற்காக உள்ஏர் அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் விமர்சிக்கப்பட்ட அதேவேளை, தாம் வாக்களிக்கவுள்ளதாக பலரும் தெரிவித்தனர். உதயன் மற்றும் வீரகேசரி செய்திப்பத்திரிகைகள் போன்ற தமிழ் ஊடகங்கள் செல்வாக்கினைக் கொண்டிருந்ததாகவும், வாக்காளர் தகவலை வழங்குவதில் தீவிரம் சார்ந்ததாக விளங்கியதாகவும், இது தொடர்பில் பெருமளவு உள்ஏர் பாராளுமன்ற உறுப்பினர்களை விட மிகவும் சுறுசுறுப்பானவை என பெரும்பாலானோர் தெரிவித்தார்கள்.

## வடக்கில் தேர்தல்களுக்கான அக்கறை

கிளிநொச்சியில் வாழ்பவர்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா குடியிருப்பாளர்கள் மத்தியில் அக்கறை மிகவும் அளப்பரியதாகத் தெரிகின்றது. இத் தருணத்தில் கிளிநொச்சியில் வாழ்பவர்களின் முன்னுரிமை தமது வாழ்க்கையை மீள்கட்டியெழுப்புவதாகவும், தமது காணிக்கு மீளத்திரும்புவதாகவும் அத்துடன் தமது வாழ்வாதாரங்களை மீளஆரம்பிப்பதாகவும் இருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பான்மையானோர் முக்கியமானதொரு நிகழ்வாக ஜனாதிபதி தேர்தலைக் கண்டார்கள். இது வாக்குறுதியை நிறைவேற்றுவதன் ஊடாக தமது எதிர்காலத்தை தீர்மானிப்பதில் நேரடியாகப் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்கியது. தமது வாழ்க்கைக்கு இத்தேர்தல் வித்தியாசமொன்றைச் செய்யாது என்று ஏனையோர் உணர்ந்ததுடன், மாற்றத்தில் சிறிதளவு நம்பிக்கையையே அவர்கள் கொண்டிருந்தார்கள். தேர்தல்கள் மீது கருத்தின் வித்தியாசமொன்று இருந்த போதிலும், பகுதியில் கட்டுப்பாடுகளின் தளர்வும், குடியிருப்பாளர்களுக்கான பாரிய சுதந்திரமும் உறுதியாக விளங்குவதாக பொதுவான உடன்பாடிருந்தது. தற்போதைய நிலையானது தற்போதைய அரசாங்கத்தினால் தேர்தல் தந்திரமொன்று மட்டுமா என பலரும் வினா தொடுத்தனர். யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் ஆகக்குறைந்தது 50%இனர் வாக்களிப்பார்கள் என பலரும் எதிர்வுகூறினார்கள்.

பலதரப்பட்ட பங்காளர்களுடன் நடத்திய கருத்துப் பரிமாறல்களில் இருந்து, மூன்று மாவட்டங்களில் உள்ள பாரிய எண்ணிக்கையிலான வாக்காளர்கள், பிரதானமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களும், மீளத்திரும்புபவர்களும் இரு பிரதான காரணங்களுக்காக - 2008 வாக்காளர் பட்டியலில் இல்லாதிருப்பதனாலும், சம்பந்தப்பட்ட வாக்காளர் அடையாள ஆவணங்களைக் கொண்டிருக்காததினாலும் வாக்களிப்பதற்கு இயலாதவர்களாக விளங்குவார்கள். இத் தருணத்தில் வாக்குரிமையை நிறைவேற்றுவதன் முக்கியத்துவம் பற்றி CMEV பேசிய உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களினதும், மீளத்திரும்புபவர்களினதும் மத்தியில் பிளவு இருந்தது. தமக்கு தேர்தல்கள் முன்னுரிமை அல்ல என்றும், தமது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானதும் என்றும் இக்குழுவின் மத்தியில் விளங்கிய பலரும் குறிப்பிட்டனர்.

## வாக்காளர் பட்டியலும், தொடர்பான பிரச்சினைகளும்

யாழ்ப்பாண தேர்தல் பட்டியல் மீது 721,359 வாக்காளர்கள் இருப்பதாக யாழ்ப்பாண உதவி தேர்தல் ஆணையாளர் திரு.குகநாதன் குறிப்பிட்டார். இது யாழ்ப்பாணம் (629,458) மற்றும் கிளிநொச்சி (91,901)

மாவட்டங்களை உள்ளடக்குகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் 91,901 பேர் பதிவுசெய்யப்பட்டுள்ள போதிலும், மாவட்டத்திற்கு மிகவும் குறைந்த எண்ணிக்கையினரே மீளத்திரும்பியுள்ளனர். மாவட்டத்திற்கு சுமார் 17,000 பேர் மட்டுமே மீளத்திரும்பிருப்பதாலும், இத் தேர்தலில் வாக்களிப்பதற்காக 5,000 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளதாகவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவித்தார். சனத்தொகையில் பெரும்பான்மையானோர் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் அல்லது விருந்தோம்பல் குடும்பங்களுடன் தொடர்ந்துமே வாழ்கின்றனர்.

வன்னி தேர்தல் பட்டியலில் 266,975 பேர் உள்ளனர். விபரம் வருமாறு: முல்லைத்தீவு: 68,729, வவுனியா: 112,924 மற்றும் மன்னார்: 85,322.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குழாம் பேசிய பெரும்பான்மையான மக்கள் 2008 வாக்காளர் பட்டியலில் தாம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். பதிவுசெய்வதற்கு இயலாதிருந்தவர்கள் 2008க்கு முன்னர் இடம்பெயர்ந்து, பின்னர் மீளத்திரும்பியவர்களாவர் (கீழே விபரமாகக் கருத்துப் பரிமாறப்பட்டுள்ளது). UNHCR எண்ணிக்கைகளின் பிரகாரம், 2010 ஜனவரி 7இல் உள்ளவாறு, வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த 69,541 பேர் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிவிட்டார்கள். மீளத்திரும்பியவர்களில் பெரும்பான்மையானோர் வாக்களிப்பதில் அக்கறையைக் கொண்டுள்ளார்கள். ஆனால், அவர்கள் வாக்காளர் பட்டியலில் இல்லை என்றும், 2010 ஜூனில் அல்லது ஜூலையில் விண்ணப்பங்கள் கோரப்படும் போது மட்டுமே உள்ளடக்கப்படலாம் என்றும் கிராம உத்தியோகத்தரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்து, யாழ்ப்பாணத்திற்கு மீளத்திரும்பிய கணிசமான எண்ணிக்கையிலானோர் ஜனாதிபதி தேர்தல்களிலும், 2010இல் நடைபெறவுள்ள ஏதாவது வேறு தேர்தல்களிலும் தமது வாக்குகளை அளிக்க முடியாது என்பதே இதன் கருத்தாகும். இச் சூழ்நிலையை கவனத்திற்கெடுப்பதற்காக தேர்தல் ஆணையாளரினாலும், அரசியல் கட்சிகளினாலும் விசேட நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும் என்பதை CMEV கவனத்திற்கெடுக்கின்றது. இலங்கை என்றுமேயில்லாத யுத்தத்திற்குப் பிந்திய சூழ்நிலையொன்றில் இருக்கிறது. மோதலினால் நேரடியாக பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த 200,000 பேர்களுக்கு மேற்பட்டோர் தமது வதிவிடத்தைக் கொண்ட மாவட்டங்களில் 2008இன் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கு இயலாதிருக்கின்றனர். 2008இல் பதிவுசெய்யப்பட்டவர்கள் மட்டுமே 2010இல் வாக்களிக்கக்கூடியவர்களாக விளங்குவார்கள் என தற்போதைய வரைச்சட்டம் குறிப்பிடுகின்ற அதேவேளை, இந்த விசேட வகுதியினர் விசேட கரிசனையை அவசியப்படுத்துகின்றனர்.

## வாக்களிப்பதற்கு அவசியமான ஆவணப்படுத்தல்

தமது வாக்கை அளிப்பதற்கு அவசியமான ஆவணங்களைக் கொண்டிருப்பதாக CMEVஉடன் பேசிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் அறிவித்தனர். வாக்களிப்பதற்கு இயலுமாக விளங்குவதற்கு ஏழு வகைகளிலான ஆவணங்களை தேர்தல் ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. அவை வருமாறு:

1. ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான கடவுச்சீட்டு
3. செல்லுபடியான வாகனமோட்டல் உத்தரவுப்பத்திரம்
4. அரசாங்க ஓய்வூதியம் பெறுவோர் அடையாள அட்டை
5. வயது முதிர்ந்தோர்: ஓய்வூதியம் பெறுவோர் அடையாள அட்டை
6. ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் மதகுருமார்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை
7. முன்னைய மாகாண சபை தேர்தல்களுக்காக தேர்தல்கள் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்ட தற்காலிகமான அடையாள அட்டை (இந்த அட்டைகள் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக மீள்-செல்லுபடியாக்கப்பட்டு, உரிமையாளர்களுக்கு மீளவழங்கப்படும்)

2009 டிசம்பர் 9 அன்று தேர்தல்கள் ஆணையாளரினால் செய்யப்பட்ட அறிவித்தலொன்றில், மேற்படி ஆவணப்படுத்தல் படிவங்களை நபர் ஒருவர் கொண்டிருக்காவிட்டால், தற்காலிகமான அடையாள அட்டையொன்றைப் பெறுவதற்காக ஜனவரி 15க்கு முன் விண்ணப்பமொன்று செய்யப்படுவது அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஆவணங்களைக் கொண்டிருக்காத சுமார் 8,000 பேருக்கு உள்ஏர் பிரதேச செயலாளரினால் தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதுடன், இவை தமது வாக்கை அளிப்பதற்காக பயன்படுத்தப்படவும் முடியும். அடையாள ஆவணங்கள் 25 அல்லது 26 வரை வழங்கப்படும் எனவும், இதனால் பெருமளவானோர் விண்ணப்பிக்க முடியும் எனவும் பெருமளவு அரசாங்க உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டார்கள். கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் இதையொத்த முன்னெடுப்புகள் இடம்பெறுகின்றன.

உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களிலிருந்து அண்மையில் மீளத்திரும்பியவர்கள் தமது வாக்குகளை அளிப்பதற்கு தேசிய அடையாள அட்டைகளை அல்லது வேறு அவசியப்பட்ட ஆவணங்களைக் கொண்டிருக்கவில்லை என CMEVக்கு அறிவிக்கப்பட்டது. அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு, பொலிசாரினால் சைச்சாத்திடப்பட்டு, நபரின் புகைப்படமொன்றை உள்ளடக்கியிருந்த தற்காலிக முகாம் அடையாள அட்டைகளைப் பலரும் காட்டினார்கள். அல்லைப்பிட்டியில் இருந்தவர்கள் தாம் தற்காலிக ஆவணங்களுக்கு விண்ணப்பித்திருந்ததாகவும், அவை கிட்டிய எதிர்காலத்தில் வழங்கப்படும் என கிராம உத்தியோகத்தர் அறிவித்ததாகவும் CMEV குழாமுக்கு தெரிவித்தார்கள். துரதிர்ஷ்டவசமாக, 2008 வாக்காளர் பட்டியலில் இந்த உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்கள் பதிவுசெய்யப்படவில்லை. ஏனெனில் அவர்கள் இதற்கு முன்னரேயே இடம்பெயர்ந்திருந்தார்கள். எனவே, ஜனாதிபதி தேர்தலில் அவர்களினால் வாக்களிக்க முடியாது.

## தேர்தல் தின ஒழுங்குகளும், கரிசனைகளும்

சம்பந்தப்பட்ட மாவட்டத்திற்கு தேர்தல் அதிகாரியான அரசாங்க அதிபரும், மாவட்டத்தில் உள்ள அவரது உத்தியோகத்தர்களும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல்களுக்கான ஒழுங்கைச் செய்வதற்காக தேர்தல் ஆணையாளருடனும், அவரது உத்தியோகத்தர்களுடனும் வேலைசெய்வதாக CMEV குழாமுக்கு அறிவிக்கப்பட்டது. வேறுபட்ட மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் கொத்தணி நிலையங்கள் பற்றியும் CMEVக்கு அறிவிக்கப்பட்டது. வாக்களிப்பு நிலையங்கள் வருமாறு:

| | |
|---|---|
| **யாழ்ப்பாணம் தேர்தல்ரீதியான பட்டியல் -** | **624** |
| யாழ்ப்பாணம் | 529 |
| கிளிநொச்சி | 95 |
| | |
| **வன்னி தேர்தல்ரீதியான பட்டியல்** | **222** |
| முல்லைத்தீவு | 50 |
| வவுனியா | 91 + (சரணடைந்தவர்களுக்காக 13 நிலையங்கள்) |
| மன்னார் | 68 |

## கொத்தணிச் சாவடிகள்

### யாழ்ப்பாணம்

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அறுபத்தியெட்டு (68) நிலையங்களும், 13 தெரிவு செய்யப்பட்ட இடங்களில் 19 நிலையங்களும், 4 தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மேலும் 08 நிலையங்களும் அமைக்கப்படும். காங்கேசன்துறையில் 34 கொத்தணி நிலையங்கள் அமைக்கப்படும் என்பதுடன், பருத்தித்துறை, குடத்தனை மீள்அமைவிட நிலையத்தில் 8 நிலையங்கள் அமைக்கப்படும்.

### வன்னி

வவுனியா

புளியங்குளம் தமிழ் மகா வித்தியாலயத்தில் 8 நிலையங்கள் கொத்தணியாக அமைக்கப்படும்.
வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் 4 நிலையங்கள்.

### முல்லைத்தீவு

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் 35 நிலையங்கள் கொத்தணியாக அமைக்கப்படும்.

### மன்னார்

வண்ணாமோட்டை அ.த.க. பாடசாலையில் 4 நிலையங்கள் கொத்தணியாக அமைக்கப்படும்.
கட்டையடம்மன் ரோ.க.த.க. பாடசாலையில் 2 நிலையங்கள் கொத்தணியாக அமைக்கப்படும்.

தமக்கு வாக்கு அட்டைகள் கிடைத்துள்ளதாகப் பெருமளவு மக்கள் CMEVக்கு கூறினார்கள். வாக்கு அட்டைகள் கிடைக்காதவர்கள் தாம் அட்டைகளுக்காகக் காத்திருப்பதாகவும், அவற்றை அவர்கள் பெற்றிருக்காவிட்டால், பிரச்சனைகளையிட்டு கிராம உத்தியோகத்தரிடம் எழுப்பி, உள்ஏர் தபால் நிலையத்தில் சோதித்துப் பார்க்க இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் வாக்களிப்பு நிலையங்கள் எங்கு அமைந்துள்ளன என்பதைப் பற்றிய விழிப்பியலை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதாக மூன்று மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர். மூன்று மாவட்டங்களிலும் எங்கு கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைந்துள்ளன என்பதையிட்டு தமிழ் ஊடகங்கள் மூலம் தகவல்

பரப்பப்பட்டுள்ளது. இது இடம்பெற்றுள்ள அதேவேளை, யாழ்ப்பாணத்தில் அண்மையில் மீளத்திரும்பியவர்கள் உட்பட வாக்களிப்பதற்கு தாம் எங்கு செல்ல வேண்டும் என்பதை அறிந்திருக்காத பெரும்பாலானோரை CMEV சந்தித்தது. சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையங்களும், கொத்தணிச் சாவடிகளும் எங்கு அமைந்துள்ளன என்ற தகவலை பரந்தளவில் பரப்புமாறு சம்பந்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களை CMEV வலியுறுத்துகின்றது. ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் வாழ்ந்து ஆனால் வேறொரு மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு பதிவு செய்யப்பட்டுள்ள மீளத்திரும்புபவர்களுக்கும், உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களுக்கும் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்படும் என தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கிளிநொச்சி, வவுனியா உட்பட வேறு மாவட்டங்களில் உள்ள கொத்தணிச் சாவடிகளில் 400-500 பேர் வாக்களிப்பாளர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இவ் வசதிக்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்கு போக்குவரத்து ஒழுங்குசெய்யப்படும். போக்குவரத்தின் அவசியத்தைக் கொண்டுள்ள நபர்கள் வசதியை அடைவதற்கான அமைவிடமும், வசதி கிட்டுகின்ற நேரமும் தெளிவற்றிருக்கின்றன. தேர்தல் தினத்தில் குழப்பநிலையைத் தவிர்த்துக் கொள்வதற்கு போக்குவரத்துக்கு தகுதிபெற்றவர்களுக்கு இத்தகவல் பரந்தரீதியில் வழங்கப்பட வேண்டும்.

மேலும், எவ்வாறு வாக்குச்சீட்டில் குறிப்பதென்பது பற்றியும், தமது வாக்கின் செல்லுபடிதன்மையை எவ்வாறு உறுதிப்படுத்துவதென்பது பற்றியும் தாம் குழப்பமடைந்துள்ள CMEVக்கு பலருமே குறிப்பிட்டார்கள். விருப்பு வாக்கினை எவ்வாறு அளிப்பதென்பது பற்றியும், புள்ளியடியொன்றா அல்லது இலக்கங்களா பயன்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் வாக்காளர்கள் மத்தியில் குழப்பநிலை இருந்தது. இது அங்கீகரிக்கப்பட்ட வாக்களிப்பு அமைப்பொன்றை வாக்காளர் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் ஆணையாளர், மாவட்ட அதிகாரிகள் ஆகியோருக்கும் மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் ஒரு பிரச்சனையாகும்.

தேர்தல் தினத்தன்று தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பது பற்றியும், பிரச்சனையொன்று எழும் போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அறிந்து வைத்திருப்பது பற்றியும் வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கு அறிவூட்டுவதற்காக யாழ்ப்பாணத்தில் வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கான பயிற்சி இடம்பெற்றுள்ளதாக CMEVக்கு அறிவிக்கப்பட்டது. 2009 ஒகஸ்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாநரக சபை தேர்தல்களுக்காக தெற்கிலிருந்து வாக்களிப்பு நிலைய முகவர்களும், மற்றும் வேறு உத்தியோகத்தர்களும் தெற்கில் இருந்து கொண்டு வரப்பட்டதாகவும், தகாத செயல்களைத் தவிர்ப்பதற்காக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல்களுக்கும் இதையொத்த முன்னெடுப்புகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனவும் பலருமே தெரிவித்தார்கள். மாவட்டங்களில் உள்ள சூழ்நிலையை மதிப்பாய்ந்து, தேர்தலில் தகாதசெயல்களைத் தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளரையும், அரசாங்க அதிபர்களையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

வாக்களிப்பதற்கு விண்ணப்பித்துள்ள இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களுக்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கக்கூடியவர்களாக விளங்குவார்கள் என தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர். முகாம்களுக்கு வாக்கு அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. முகாம்களில் வசித்த வேளையில் விண்ணப்பித்து, தமது விண்ணப்பத்தில் முகாம் விலாசத்தை வழங்கிவிட்டு தமது காணிக்குத் திரும்பியவர்கள் எவ்வாறு வாக்கு அட்டையைப் பெற்றுக்கொள்வார்கள் என்பது தொடர்பில் குழப்பநிலை இருந்தது. வாக்கு அட்டைகளைப் பெறுவதற்காக அவர்கள் முகாம்களுக்கு செல்ல வேண்டுமா அல்லது வாக்கு அட்டைகள் புதியதொரு விலாசத்திற்கு தபால்மூலம் அனுப்பி வைக்கப்படுமா என்பதையிட்டும் குழப்பநிலை இருந்தது. வாக்களிப்பதற்கு வாக்கு அட்டை அவசியமில்லை என்ற போதிலும், உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களினதும், மீளத்திரும்பியவர்களினதும் வாக்களிப்பு உரிமைகள் என்று வரும் போது குழப்பநிலையினதும், திட்டமிடல் இன்மையினதும் உதாரணமொன்றாக இது விளங்குகின்றது.

2009 ஒக்ரோபரில் அழிவு முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சினால் வகுத்தமைக்கப்பட்ட தேசிய செயல்திட்டத்தின் பிரகாரம், ‘‘சரணாகதி’’ அடைந்த சுமார் 11,000 பேர் தொடர்ந்துமிருக்கின்றனர். 2005 ஓகஸ்டின் 1405/14 இலக்க மற்றும் 2006 செப்ரெம்பரின் 1462/8 இலக்க ஒழுங்குவிதிகளின் கீழ் இந்நபர்கள் வருகின்றார்கள். இந்த ஒழுங்குவிதிகளின்படி சரணாகதியடைகின்ற நபர் ஒருவர் 12 மாதங்கள் வரை புனர்வாழ்வு முகாம்களில் இன்னொரு 12 மாதங்களைக் கொண்ட சாத்தியமான நீடிப்பொன்றுடன் தொடர்ந்தும் இருக்க முடியும். புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் நோக்கெல்லையினுள் சரணாகதியடைந்தவர்கள் வருகின்றார்கள். வாக்களிப்பதற்கு ‘சரணாகதியடைந்தவர்களை’ அனுமதிப்பதற்காக தற்போது கருத்துப்பரிமாறல்கள் இடம்பெறுவதாக CMEVக்கு அறிவிக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் மீதான அடிப்படையில் ‘சரணாகதியடைந்தவர்களுக்கு’ பின்வரும் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன:

1. வ/பம்பைமடு வளாக விடுதி - 137
2. வ/தொழில்நுட்பக் கல்லூரி, நெலுக்குளம் - 272
3. வ/முஸ்லிம் மகா வித்தியாலயம் பட்டணிச்சூர் மண்டபம் இல.04 - 141
4. வ/காமினி மகா வித்தியாலயம் - 81
5. வ/கந்தபுரம் வன்னி மகா வித்தியாலயம் - 189
6. வ/வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் (ஆரம்ப) - 153
7. வ/இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலய மண்டபம் இல.02 - 106
8. வ/இந்துக் கல்லூரி, கோவில்குளம் - 112
9. வ/வெளிக்குளம் கனிஷ்ட பாடசாலை மண்டபம் - இல. 03 - 111
10. வ/பூந்தோட்டம் மகா வித்தியாலய மண்டபம் - இல. 02 - 164
11. வ/ஓமந்தை மகா வித்தியாலய மண்டபம் - இல. 02 - 370
12. வ/முதலியார் குளம் அ.த.க.பாடசாலை மண்டபம் - இல.02 - 336
13. வ/பம்பைமடு பிராந்திய 1-137

ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தல் ஆணையாளரினால் அடையாளங் காணப்பட்ட கணக்கிடும் நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படுகின்றன. எனவே, யாழ்ப்பாணம் தேர்தல்ரீதியான பட்டியலினுள் கிளிநொச்சி மாவட்டம் வருகின்றதுடன், கிளிநொச்சியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களிலிருந்தும், கொத்தணிச் சாவடிகளிலும் இருந்தும் வாக்குப் பெட்டிகளை யாழ்ப்பாணத்திற்கு ஏற்றி இறக்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வீதியின் ஊடாக தேர்தல் உத்தியோகத்தர்கள், பொலிசார் மற்றும் அரசியல் கட்சி முகவர்கள் ஆகியோர் துணைக்குச் செல்ல வாக்குப் பெட்டிகள் ஏற்றி இறக்கப்படவுள்ளன.

## உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களினதும், மீளத்திரும்புபவர்களின் வாக்களிப்பதற்கான உரிமை

உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களும், மீளத்திரும்பியவர்களும் வாக்களிப்பதற்கான உரிமை உட்பட இலங்கையின் ஒவ்வொரு பிரஜையையும் போன்ற அதே அரசியலமைப்பு உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். மோதலின் தாக்குதலை நேரடியாக தாங்கிக் கொண்டவர்களும், தமது வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களும் மோதலின் விளைவொன்றாக முகம்கொடுத்த கஷ்டங்களின் காரணமாக தோதான ஆவணப்படுத்தலையும், பதிவினையும் பெற இயலாதிருக்கின்றார்கள். அவர்களுக்கு விசேட கவனம் அவசியமானதாகும். இது முகாம்களில் இன்னுமே 100,000க்கு மேற்பட்ட உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்கள் தொடர்ந்துமே இருக்கின்ற புதுமையான சூழ்நிலையொன்றாகும். சுமார் 150,000 பேர் மீளத்திரும்பிவிட்டார்கள். வாக்களிப்பதற்கான தமது உரிமையையிட்டு பலரும் அறிந்து வைத்திருக்கவில்லை அல்லது தமது வாக்குகளை அளிப்பதற்கு இயலாதிருக்கின்றனர் என இக்குழுக்களுடன் CMEV நடத்திய கருத்துப்பரிமாறலின் போது எடுத்துரைக்கப்பட்டது. பதிவு இன்மை, தோதான ஆவணங்கள் இன்மை, தாம் தற்போது வசிக்கின்ற மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு இயலுமாக இருப்பதையிட்டும், மற்றும் தமது வாக்களிப்பு நிலையத்தின் அமைவிடத்தையும் இட்டும் அறிந்து வைத்திருக்காமல் இருத்தல் ஆகியன உட்பட பெருமளவு காரணங்களின் நிமித்தம் பல ஆயிரக்கணக்கானோர் வாக்குரிமையை இழக்கக்கூடும் என்பதையிட்டு CMEV கரிசனை கொண்டுள்ளது.

2010 ஜனவரியில் தமிழ் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட வாக்காளர்கள் எங்கு வாக்களிக்க வேண்டும் என்பதையும் வாக்களிப்பதற்கு பதிவு செய்வதற்காக உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நீடிப்பையும் அறிவிக்கும் செய்திப்பத்திரிகை விளம்பரங்கள் உட்பட உள்ளகீதியாக இடம்பெயர்ந்தவர்களினதும், மீளத்திரும்பியவர்களினதும் உரிமைகளைக் கவனத்திற்கெடுப்பதற்காக தேர்தல் ஆணையாளரினால் ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை CMEV வரவேற்கின்றது. இந்நடவடிக்கைகள் ஓரளவு கரிசனைகளைக் கவனத்திற்கெடுத்துள்ள போதிலும், பிரச்சனைகள் இன்னுமே தொடர்ந்திருக்கின்றன என்பதை யாழ்ப்பாணத்திற்கும், கிளிநொச்சிக்கும் மற்றும் வவுனியாவுக்குமான வருகைதரல் முனைவுபடுத்தியது.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே வாழ்ந்தவர்களும், மோதலின் விளைவொன்றாக வன்னிக்கு இடம்பெயர்ந்தவர்களுமான பலரையும் CMEV சந்தித்தது. UNHCR எண்ணிக்கைகளின் பிரகாரம், 2010 ஜனவரி 7இல் உள்ளவாறு, வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து, யாழ்ப்பாணத்திற்கு மீளத்திரும்பியுள்ள 69,541 பேர் இருந்தனர். இத்தகைய பாரிய எண்ணிக்கையிலான மீளத்திரும்புதலினாலும், மீளத்திரும்புதல் இன்னுமே தொடர்வதனாலும் இந்த மீளத்திரும்புபவர்கள் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர்களாக விளங்குவார்களா என்பது பற்றிய கரிசனைகள் உள்ளன. இடம்பெயர்வதற்கு

முன் யாழ்ப்பாணத்தில் வாக்களிப்பதற்கு தாம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அல்லைப்பிட்டியிலும், ஊர்காவற்துறையிலும் CMEV பேசிய பலருமே எடுத்துக்காட்டினார்கள். யாழ்ப்பாணத்தில் கடைசியாக நடத்தப்பட்ட 1981 குடிசனக் கணக்கெடுப்பின் போது யாழ்ப்பாணத்தில் சமூகமளித்திருந்ததாக சகலருமே உறுதிப்படுத்தினார்கள். மாவட்டத்தில் தமது வதிவிடத்தின் சான்றாக இது கருதப்பட வேண்டும் என அவர்கள் உணர்ந்தார்கள். இக் கரிசனைகளை அரசாங்க அதிகாரிகளிடம் CMEV எழுப்பியது. 2008 யாழ்ப்பாணம் வாக்காளர் பட்டியலில் நபர்கள் இருக்காவிட்டால், 2010இல் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் வட மாகாண சபைத் தேர்தல்கள் ஆகியன உட்பட ஏதாவது தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அவர்கள் தகுதிபெற்றிருக்கமாட்டார்கள் என அவ்வதிகாரிகள் தெரிவித்தார்கள். 2007இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுடன் 2008 வாக்காளர் பட்டியல் தொகுக்கப்பட்டதுடன், எனவே இத் திகதிக்கு முன்னர் இடம்பெயர்ந்த அல்லது புலம்பெயர்ந்த நபர்களை விட்டுவிடுகின்றது. மோதலுடன் பலரும் இடம்பெயர்ந்ததுடன், பதிவு செய்ய முடியாமல் இருந்ததுடன், தமது ஆவணங்களையும் இழந்திருந்தனர். மோதலின் விளைவொன்றாக பெருமளவு கஷ்டங்களுக்கு முகம்கொடுத்ததும், மோதலினதும், இடம்பெயர்வினதும் தாக்கத்தை கவனத்திற்கு எடுக்காத சட்ட வரைச்சட்டமொன்றின் காரணமாக, வாக்குரிமை இழப்புக்கு தற்போது முகம்கொடுப்பதுமான இந்த மக்கள் குழுவுக்கு விசேட கரிசனை வழங்கப்படுவது அவசியமாகும். அழிவுகளினால் பாதிக்கப்பட்டதும், இதன் பிரகாரம் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கு இயலாததுமான பாதிக்கப்பட்டவர்களினால் முகங்கொடுக்கப்படும் கஷ்டங்களை அங்கீகரிப்பதற்கு புதிய சட்டவாக்கத்தை வகுத்தமைக்குமாறு சகல பங்காளர்களையும் CMEV வலியுறுத்துகின்றது.

இடம்பெயர்வுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நபர்கள் வாழ்ந்தார்களா என்பதைச் சரிபார்ப்பதற்கு குடிசனக் கணக்கெடுப்பு ஓர் ஆரம்பப் புள்ளியாக இருக்கின்ற போதிலும், 1981இன் பின்னர் பிறந்ததும் தற்போது 18 வயதுக்கு மேற்பட்டதும் அத்துடன் யாழ்ப்பாணத்தில் ஏதாவது பட்டியலில் அங்கீகரிக்கப்படாததுமான நபர்களை இது கவனத்திற்கெடுக்கவில்லை. இலங்கை முழுவதும் சாத்தியமான விரைவில் குடிசனக் கணக்கெடுப்பொன்றை நடத்துமாறு குடிசனக் கணக்கெடுப்பு திணைக்களத்தை CMEV வலியுறுத்துகின்றது.

உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் போன்ற யாழ்ப்பாணத்தில் உள்ள வயதான உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் 2008 வாக்குப் பட்டியலில் உள்ளதுடன், உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள கொத்தணிச் சாவடிகளில் வாக்களிப்பதற்கும் தகுதியைக் கொண்டுள்ளார்கள்.

ஆவணங்கள் இன்மையே உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களினாலும், மீளத்திரும்பியவர்களினாலும் குறிப்பிட்ட இன்னொரு பிரச்சனையாகும். இது வாக்குரிமை இழப்புக்கு இட்டுச் செல்லும். எதிர்வரும் தேர்தல்களுக்காக யாழ்ப்பாணத்தில் 8,000 தற்காலிக அடையாள ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல்களுக்கு முன் அதிகமானளவு வழக்கப்படவுள்ளதாகவும் CMEVக்கு அறிவிக்கப்பட்டது.

தமது இடம்பெயர்வினதும், மீளத்திரும்புதலினதும் காரணமாக பெருமளவு அரசாங்க அமைச்சுக்களுடன் மீளத்திரும்புபவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக CMEV கவனத்திற்கெடுக்கின்றது. ஏற்கனவே மீளத்திரும்பியவர்களுக்கு தற்காலிக முகாம் அட்டையொன்று பொலிசாரினால் வழங்கப்பட்டுள்ளது, அரசாங்கத் தரவுத் தளத்தில் மீளத்திரும்புபவர்கள் உள்ளனர், அரசாங்கத்தினால் வங்கிக் கணக்கு வைப்பொன்றை உள்ளடக்குகின்ற ரூபா 25,000ஐக் கொண்ட மீளத்திரும்புதல் உதவியைப் பெற்றிருக்கின்றார்கள், அத்துடன் அரசாங்கத்திடமிருந்து உலர் உணவுப் பொருட்களைப் பெற்றிருக்கின்றார்கள். எனவே, அவர்கள் ஆகக்குறைந்தது ஒரு அரசாங்க தரவுத் தளத்தில் இருப்பதுடன், அவர்களது அந்தஸ்து அரசாங்க உத்தியோகத்தர்களினால் சரிபார்க்கப்பட்டுள்ளது. முன்னைய வாக்காளர் பட்டியல்களில் உள்ளதும், உள்ளகரீதியாக இம்பெயர்ந்தவர்களாகவும், மீளத்திரும்பியவர்களாகவும் பதிவுசெய்யப்பட்டதும் அத்துடன், புகைப்படமொன்றுடன் ஆகக்குறைந்தது தற்காலிக அடையாள அட்டையைக் கொண்டிருப்பதுமான உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களும், மீளத்திரும்புபவர்களும் தமது சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளருக்கு விண்ணப்பிக்க இயலுமாக இருப்பதுடன், சம்பந்தப்பட்ட நபர் ஒன்றில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவராக அல்லது மீளத்திரும்பியவராக இருப்பதை உறுதிப்படுத்தும் கடிதமொன்றை உறுதிப்படுத்தி, மாவட்டத்திற்கான தேர்தல் அதிகாரியாகவும் விளங்குகின்ற சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபரினால் அதை அங்கீகரிக்க வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட கடிதமும், பொலிசாரினால் வழங்கப்பட்ட தற்காலிக முகாம் அடையாள அட்டை போன்ற புகைப்பட அடையாள அட்டையொன்றும் இந்த விசேட நபர்களின் வகுதியினருக்கு செல்லுபடியான வாக்காளர் அடையாள ஆவணமாக அனுமதிக்கப்பட வேண்டும் என CMEV விதந்துரைக்கின்றது.

இடம்பெயர்ந்துள்ள எஞ்சியுள்ள 100,000க்கு மேற்பட்டவர்களில், ஜனாதிபதி தேர்தல்களில் தமது வாக்கை அளிப்பதற்காக 31,000 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர். மேற்படி எண்ணிக்கையில் 23,000 விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென CMEVக்கு அறிவிக்கப்பட்டது. பெருமளவு விடயங்களை அதாவது உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் அக்கறையின்மையிலிருந்து உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் விழிப்பியல் இன்மை வரையும், வாக்களிப்பதற்கு தகுதியடைவதற்கு எத் தேவைகள் செய்யப்பட வேண்டும் என்பது மீதான குழப்பநிலையையும் விண்ணப்பங்களின் குறைந்த எண்ணிக்கை கருத்தினைக் கொண்டிருக்கக்கூடும். பதிவு செய்வதற்காக உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களில் விழிப்பியலை உயர்த்துவதற்கும், ஊக்கமளிப்பதற்கும் தேர்தல் ஆணையாளரினாலும், அவரது அதிகாரிகளினாலும், மற்றும் வேறு சிவில் சமூகத் தாபனங்களினாலும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை அங்கீகரிக்கின்றது. துரதிர்ஷ்டவசமாக, பெருமளவு அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் சுறுசுறுப்பின்றி விளங்கியதுடன், உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களின் வாக்காளர் உரிமைகளுக்கு ஆதரிக்கவுமில்லை. இந்த பாதிக்கப்பட்ட குழுக்களின் அக்கறைகளைப் பிரதிநிதிப்படுத்துபவர்கள் எதிர்காலத்தில் அதிகளவு அக்கறையைக் காட்டுவார்கள் என்றும், அவர்களது உரிமைகளை ஆதரிப்பதில் மிகவும் சுறுசுறுப்பான வகிபங்கினை ஆற்றுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னைய பகுதியில் குறிப்பிட்டவாறு, இடம்பெயர்ந்தவர்களுக்காக கொத்தணிச் சாவடிகளும், போக்குவரத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. செய்யப்பட்டுள்ள ஒழுங்குகளைப் பிரச்சாரப்படுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களை CMEV வலியுறுத்துகின்றது. இதனால் தேர்தல் தினத்திற்கு முன்னரேயே ஒழுங்குகளையிட்டு உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களும், மீளத்திரும்புபவர்களும் அறிந்து வைத்திருப்பதுடன், தேர்தல் தினத்தன்று குழப்பநிலையும் இருக்கமாட்டாது.

ஒருவரின் வாக்கைச் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய அடையாள அட்டையின் விழிப்புணர்வை எழுப்புவதற்காக தேர்தல்கள் ஆணையாளரினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை CMEV வரவேற்கின்றது. இப்பிரச்சனை மீது விழிப்பியலை உயர்த்துவதற்காக சகல மூன்று மொழிகளிலும் பகிரங்க இயக்கமொன்றை CMEVஇன் அங்கத்துவ உறுப்பொன்றான CPA நடத்தியது. மேலும் விழிப்பியல் அவசியமென கவனத்திற்கெடுக்கின்றது. இதனால், தமது வாக்கினை அளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள அடையாளங் காட்டலின் அமைப்புக்களையிட்டு வாக்காளர்கள் அறிந்து வைத்திருப்பதுடன், இது சம்பந்தப்பட்டவர்களினாலும், ஊடகக் குழுக்களினாலும் தொடர்ச்சியாகச் செய்யப்பட வேண்டும்.

## முடிவுரை

உயர் பாதுகாப்பு வலயத்துடன் உண்மையான மாற்றம் இல்லாத போதிலும் A9 வீதி மீதான நடமாட்டம் மீதான கட்டுப்பாடுகளையும், யாழ்ப்பாணத்தினுள் கட்டுப்பாடுகளையும் நீக்கியதை CMEV வரவேற்கின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள தமது காணிகளுக்கு பலரினாலும் மீளத்திரும்பக்கூடியதாகவிருந்தது. கிளிநொச்சிக்கும், முல்லைத்தீவுக்கும் மீளத்திரும்புதல் விரைவாக இடம்பெறவில்லை.

இந்த ஜனாதிபதி தேர்தலில் உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களினதும், மீளத்திரும்புபவர்களினதும் விளைவிலான வாக்குரிமை இன்மையும், உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களின் குறைந்த எண்ணிக்கையும், 2008 வாக்காளர் பட்டியலில் இல்லாதிருப்பதன் அல்லது அவசியமான ஆவணங்களைக் கொண்டிருக்காததன் காரணமாக பலருமே வாக்களிக்கு முடியாதிருத்தலையும் இட்டு CMEV ஆழமாக கரிசனையைக் கொண்டுள்ளது. இது அவசரமாக கவனத்திற்கெடுக்கப்படுவதை அவசியப்படுத்துகின்றது. எதிர்கால அழிவுச் சூழ்நிலையில் உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களினதும், மீளத்திரும்புபவர்களினதும், மற்றும் அழிவுகளினால் பாதிக்கப்பட்டவர்களினதும் உரிமைகள் மரியாதையளிக்கப்படுவதையும், வாக்களிப்பதற்கான தமது அரசியலமைப்பு உரிமையை நிறைவேற்றுவதற்கு சகலரும் இயலக்கூடியவர்களாக இருப்பதையும் உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கமும், தேர்தல்கள் ஆணையாளரும் மற்றும் அரசியல் கட்சிகளும் முன்மொழிவுகளை வகுத்தமைப்பது அவசியமானதாகும்.

இந்த ஜனாதிபதி தேர்தலில் வடக்கிலிருந்து ஒப்பீட்டுரீதியில் குறைந்த மட்டத்திலான வன்முறை பற்றி அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் இயக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அரச வளங்களின் அறிக்கையையிட்டு CMEV கரிசனை கொண்டுள்ளது. வாக்காளரைப் பயமுறுத்துதல், ஆள்மாறாட்டம் மற்றும் வாக்குபெட்டியில் வாக்குகளை அடைத்தல் ஆகியன உட்பட தேர்தல் தினத்தன்று சாத்தியமான தகாதசெயல்களையிட்டும் CMEV கரிசனை கொண்டுள்ளது. யாழ்ப்பாண மற்றும் வவுனியா குடியிருப்பாளர்கள் மத்தியில் காட்டப்பட்ட உயர்வான அக்கறை வரவேற்கப்பட வேண்டும் என்பதுடன், வாக்குக்கு தகுதிபெற்ற யாவரும் தமது வாக்கை

அளிக்க வேண்டும் என CMEV ஊக்கமளிக்கின்றது. யுத்தத்திற்கு பிந்திய சூழ்நிலையொன்றில் முழு வடக்கு மாகாணத்தில் இத்தேர்தல்கள் முதல் தடவையாக நடப்பதுடன், தமது எதிர்காலத்திற்கு பகுதியில் உள்ள மக்களுக்கு என்ன தேவை என்பதற்கான ஒரு சோதனையாகும். தமது வாக்குரிமையை நிறைவேற்றுவதற்கு சகல பிரஜைகளும் இயலக்கூடியவர்களாக இருப்பார்கள் என்பதுடன், ஜனவரி 26 அன்று அவ்வாறு செய்வார்கள் என நம்பிக்கை கொள்ளப்படுகின்றது.

2010 ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பாக CMEVஇலிருந்து மேலும் புதுப்பித்தல்கள் தற்போது பின்வரும் எமது இணையதளத்தில் கிட்டும்: http://cmev.wordpress.com

தேர்தல் தொடர்பான வன்முறையின் நிகழ்வினைக் கண்காணிப்பதற்காக சுதந்திரமானதும், கட்சி சார்பற்றதுமான தாபனமொன்றாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைக்கு எதிரான கூட்டணி ஆகியவற்றினால் 1997இல் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அமைக்கப்பட்டது. இது தற்போது CPA, FMM மற்றும் INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கலாநிதி பி.சரவணமுத்து | திரு.சுனில் ஜயசேகர | திரு.உதய களுபத்திரன |
| இணை-கூட்டுனர் | இணை-கூட்டுனர் | இணை-கூட்டுனர் |